வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 09.03.2026 திங்கட்கிழமை | இதழ் : 63 | பக்கங்கள் : 08

## உலகில் மனிதநேயம் மிக்க நாடாக இலங்கையை மாற்றுவதே நோக்கம்!

### மகளிர் தின நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார


கொழும்பு, மார்ச் 09

இலங்கையை, உலகில் மனித நேயம் மிக்க நாடாக மாற்றுவதே தமது எதிர்பார்ப்பு என தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க,

உலகில் ஏற்படும் எந்தவொரு யுத்தத்தின் போதும் மனிதநேயத்தின் கொடியை முன்னெடுத்துச் செல்லும் தேசம் இலங்கைத் தேசம் என்ற செய்தியை உலகிற்கு கொண்டு செல்வதாக தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உலகில் எவ்வளவு வளர்ந்த நாடுகள் இருந்தாலும், இலங்கை எத்தகைய பொருளாதாரப் பிரச்னைகளுக்கு முகம்கொடுத்தாலும், மனிதநேயம் நிறைந்த மக்கள் வாழும் ஒரே நாடு 07



## இந்து சமுத்திரத்தில் போர்ச்சூழல் உலகுக்கே கடுமையான பாதிப்பு!

### எச்சரிக்கின்றார் ஹர்ஷ டி சில்வா



கொழும்பு, மார்ச் 09

இந்து சமுத்திரத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மோதலை நாம் விரும்பவில்லை. இந்து சமுத்திரத்தில் போர்ச் சூழல் ஏற்படும் பட்சத்தில் அது இலங்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்துக்கும் கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

டில்லியில் இடம்பெற்ற ரைசினா உரையாடல் - 2026 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கலாநிதி ஹர்ஷ டி சில்வா இந்தியா சென்றுள்ளார். அங்கு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

சர்வதேச கடல் பகுதியில், ஆனால் இலங்கைக் கடற்பரப்பிற்கு சற்று வெளியே ஈரானிய கடற்படை போர்க் கப்பல் தாக்குதலுக்குள்ளானது. எவ்வாறிருப்பினும் அந்த தாக்குதல் எமது பிரத்யேக பொருளாதார கடற் பிராந்திய எல்லைக்குள்ளேயே இடம்பெற்றுள்ளது. இலங்கை எப்போதும் ஒரு 07

## சர்வதேச நீதி கோரி நேற்று வட்டுவாகலில் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 09

இராணுவத்திடம் கையளித்த தமது உறவுகள் எங்கே? இவர்களுக்கு என்ன நடந்தது? இந்த விவகாரத்துக்கு 07



## இந்தியப் பெருங்கடல் எக்காலத்திலும் அமைதி வலயமாக இருக்கவேண்டும்!

### சஜித் பிரேமதாஸ வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 09

இந்தியப் பெருங்கடல் பிராந்தியமானது எக்காலத்திலும் அமைதி வலயமாக இருக்க வேண்டும் என்றும், அது எந்தவொரு இராணுவ மோதல்களின் ஒரு பகுதியாக மாறக்கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியமானது அமைதி 07

## ஓமான் எயார் சேவை ஒரு வாரம் இல்லை!

கொழும்பு, மார்ச் 09

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றமான சூழலை தொடர்ந்து, இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை வளைகுடா நாடுகளுக் கான தனது அனைத்து 07

## ஈழத் தமிழர்கள் மீது கொத்துக்குண்டு வீச்சு அதேபோல் இஸ்ரேல் மீது ஈரானும் தாக்குதல்!

### மகளிர் நாள் நிகழ்வில் சிறிதரன் எம்.பி.

கிளிநொச்சி, மார்ச் 09

சர்வதேச போர் விதிமுறைகளை மீறி எவ்வாறு தமிழர்கள் மீது இலங்கை அரசு கொத்துக் குண்டுகளை வீசி மிக மோசமான போர் நடவடிக்கைகளை செய்துள்ளதோ அதே போன்று ஈரான் தற்போது இஸ்ரேல் மீது கொத்துக் குண்டுகளை வீசி இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞனம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற பன்னாட்டு 07

## காப்பாற்றப்பட்ட ஈரானிய மாலுமிகள் வெலிசறை, கொக்கலை முகாம்களுக்கு!

கொழும்பு, மார்ச் 09

தாக்குதலுக்குள்ளான ஐரிஸ் டேனா கப்பலில் இருந்து மீட்கப்பட்டு, கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்த 22 மாலுமிகள் கொக்கலை விமானப்படை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் 4ஆம் திகதி காலி துறைமுகத்தில் இருந்து சுமார் 40 கடல் மைல் தொலைவில் விபத்துக்குள்ளான ஈரான் கடற்படைக்குச் சொந்தமான இக்கப்பலில் இருந்த 35 பேரை இலங்கை 07

## மத்திய கிழக்குப் போரினால் தேயிலை ஏற்றுமதி முடக்கம்!

கொழும்பு, மார்ச் 09

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழல் காரணமாக, இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை விற்பனை பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

இதனால் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களின் உரிமையாளர்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். 07

## ரணிலை கைது செய்த அநுரகுமார எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

### கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, மார்ச் 09

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்த ஜனாதிபதி அநுர எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார் .

தனது உத்தியோக பூர்வ எக்ஸ் தளத்திலேயே இதனை பதிவிட்டுள்ளார் .

அவர் தனது எக்ஸ் தளத்தில் 07

## மின்சார சபை ஊழியர்களுக்கு 25 வீத சம்பள உயர்வுக்கு முடிவு!

கொழும்பு, மார்ச் 09

இலங்கை மின்சார சபையின் அனைத்து ஊழியர்களுக்கும் 25 வீதம் வேதன உயர்வை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையில் நீண்டகாலமாக நிலவி வந்த சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தம் வழங்கவில்லை!

## ஈரான் மாலுமிகள் தொடர்பில் வெளியான செய்திகளை மறுக்கிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, மார்ச் 09

கடலில் மீட்கப்பட்ட ஈரான் மாலுமிகளை மீண்டும் ஈரான் நாட்டுக்கு அனுப்ப வேண்டாம் என அமெரிக்கா இலங்கைக்கு அழுத்தம் கொடுத்ததாக வெளியாகும் செய்திகளைப் பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாகப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர-

அமெரிக்க அரசாங்கமோ அல்லது அந்த நாட்டுத் தூதரகமோ இலங்கைக்கு எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை என்றும், இது குறித்து எந்தவொரு இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மீட்கப்பட்ட மாலுமிகள் தற்போது இலங்கையின் பாதுகாப்பின் கீழ் உள்ளதாகவும், முதலாம் கட்டமாக மீட்கப்பட்ட 32 மாலுமிகள் பூஸா முகாமிலும், இரண்டாம் கட்டமாக மீட்கப்பட்ட 204 மாலுமிகள் வெலிசர முகாமிலும் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஈரான் நாட்டுடன் நீண்டகால உறவைப் பேணி வரும் அதேவேளை, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளுடனான உறவையும் சமநிலையில் பேண வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக இஸ்ரேலில் அதிகளவிலான இலங்கையர்கள் பணியாற்றுவதை அவர் இதன்போது நினைவுகூர்ந்தார்.

இதேவேளை, மாலுமிகள் தொடர்பான விவகாரங்கள் சர்வதேச சட்டங்கள் மற்றும் இராஜதந்திர விதிமுறைகளுக்கு அமைவாகவே கையாளப்படும் என வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் துஷார ரொட்ரிக்கோ தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர்களை அரசியல் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்துவது நிலைமையை மேலும் சிக்கலாக்கும் எனக் குறிப்பிட்ட அவர், இலங்கை ஒரு நடுநிலையான நாடு என்ற அடிப்படையில் அமைதியான முறையில் இந்தப் பிரச்னையை அணுகுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் வலியுறுத்தியுள்ளார். (அ)

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது களஞ்சியப்படுத்தப்பட்ட பொருள்கள் அழிப்பு

மன்னார், மார்ச் 09

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் பொது மக்களால் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின்போது உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி, பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நகரசபை சுகாதார பரிசோதகர் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது காலாவதியான உணவு பொருள்களை காட்சிப்படுத்தியமை, அழுகிய மரக்கறி, பழங்கள் காட்சிபடுத்தியிருந்தமை, உணவு பொருள்களை உரிய வகையில் களஞ்சியப்படுத்தாமை உள்ளிட்ட குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது.

இந்த நிலையில் வர்த்தக நிலையத்தின் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் வர்த்தக நிலையத்திற்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட உணவு பொருள்களையும் உடனடியாக அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து குறித்த உணவு பொருள்கள் மீண்டும் எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத வகையில் அழிக்கப்பட்டன.

சுமார் 13 இலட்சம் ரூபா பெறுமதியான உணவு பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் சுகாதாரத்துறையினர் தொடர்ச்சியாக உணவகங்களின் சுகாதாரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## ஓகஸ்ட் மாத இறுதிவரை தடையின்றி எரிபொருள்

கொழும்பு, மார்ச் 09

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியிலும், இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இறுதி வரை தடையின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் உள்ள டீசல், பெற்றோல் மற்றும் மசகு எண்ணெய் கையிருப்பு ஏப்ரல் மாதம் இறுதி வரை போதுமானதாக உள்ள நிலையில், நீண்டகால ஒப்பந்தங்கள் மூலம் ஓகஸ்ட் மாதம் வரையிலான எரிபொருள் தேவைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் ஹார்முஸ் நீரிணை மூடப்படக்கூடும் என்ற அச்சம் நிலவினாலும், இலங்கையின் எரிபொருள் இறக்குமதிக்கு இதுவரை நேரடி பாதிப்புகள் ஏற்படவில்லை என பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அல்ஜீரியா, நைஜீரியா மற்றும் ரஷ்ய சந்தைகளில் இருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இதேவேளை, நாட்டில் தற்போது 33 நாட்களுக்குத் தேவையான டீசல் மற்றும் 28 நாட்களுக்குத் தேவையான பெற்றோல் கையிருப்பில் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் உறுதியளித்துள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, எரிபொருள் களஞ்சியப்படுத்தும் வசதிகளை மேம்படுத்துவதற்காக 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகப் பாதைகளில் பாதிப்பு ஏற்பட்டாலும், அதனை எதிர்கொள்ளத் தேவையான பொருளாதார மற்றும் நிதி ரீதியான திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே தயார் செய்துள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## கத்தி முனையில் 5 பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 09

வடமராட்சி கிழக்கு மணல்காடு சந்தி பகுதியில் உள்ள வீடு ஒன்றிற்குள் நேற்று அதிகாலை 1:00 மணியளவில் புகுந்த நபர்கள், கத்தி முனையில் 5 பவுண் நகையை கொள்ளையிட்டு சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 1:00 மணியளவில் மதிலால் பாய்ந்து 3 திருடர்கள் குறித்த வீட்டுக்குள் புகுந்து, கணவனை தாக்கிவிட்டு மனைவியின் கழுத்தில் கத்தியை வைத்து அவர் அணிந்திருந்த சுமார் 5 பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றதுடன், குறித்த பெண்ணையும் தாக்கியுள்ளனர். இதில் படுகாயமடைந்த தனது கணவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக, பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து உடனடியாக மருதங்கேணி போலீசாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும், அவர்கள் நீண்ட நேரத்திற்குப் பின்னரே சம்பவ இடத்திற்கு வந்ததாக தெரிவித்துள்ளனர்.

## மின்வெட்டு ஏற்படும் என்ற செய்தியை முற்றாக மறுத்தது மின்சக்தி அமைச்சு

கொழும்பு, மார்ச் 09

இலங்கையின் மின்சார விநியோகத்தில் நிலக்கரி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ள போதிலும், மின்வெட்டு ஏற்படும் என்ற செய்திகளை மின்சக்தி அமைச்சு முற்றாக மறுத்துள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்கு தற்போது நிலக்கரி வழங்கும் நிறுவனத்திடம் இருந்து விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டால், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிலவும் கடல் சீற்றம் காரணமாக நிலக்கரியை இறக்குமதி செய்வதில் சிக்கல் ஏற்படக்கூடும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள நிலக்கரியின் தரம் குறைவாக உள்ளதால், மின் உற்பத்தித் திறன் குறைந்துள்ளதோடு, சுமார் 8.5 பில்லியன் ரூபாய் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தத் தகவல்களை மறுத்துள்ள மின்சக்தி அமைச்சு, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான 36 நிலக்கரி கப்பல்களில் 22 கப்பல்கள் ஏற்கனவே வந்தடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

எஞ்சிய நிலக்கரித் தேவையை எவ்விதத் தடங்கலுமின்றி பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், ஏப்ரல் மாதத்தில் மின்வெட்டு ஏற்படும் என்ற அச்சம் தேவையில்லை என அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அவசரத் தேவைகளுக்காக மாற்று வழிகளில் நிலக்கரியைப் பெற்றுக்கொள்ளவும், ஏப்ரல் இறுதி வரை மின் உற்பத்திக்கான எரிபொருள் இருப்பை உறுதிப்படுத்தவும் முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

எனவே, தடையற்ற மின்சார விநியோகம் குறித்து பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும், தவறான தகவல்களை நம்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

## மத்திய கிழக்கில் வசிக்கும் இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கு விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, மார்ச் 09

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியில், அங்கு வசிக்கும் இலங்கையர்களில் அவசரத் தேவைகள் காரணமாக நாடு திரும்ப விரும்புவோருக்காக விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமைச்சின் ஊடகப் பேச்சாளர் துஷார ரொட்ரிக்கோ, உதவி தேவைப்படும் இலங்கையர்கள் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் அல்லது தூதரகப் பொதுக் காரியாலயங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, போர் பதற்றம் நிலவும் பகுதிகளில் தங்கியுள்ள இலங்கையர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறும், தூதரகங்களுடன் தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணுமாறும் வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.03.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் கேலிக்கூத்து

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மனைவி மெலெனியா அண்மையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கூட்டம் ஒன்றுக்கு தலைமை தாங்கியமை குறித்து இராஜதந்திர வட்டாரங்கள், சர்வதேச ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பெருவாரியான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

உலகின் மிகவும் அதிகாரமிக்க இராஜதந்திர அரங்கங்களில் ஒன்றான பாதுகாப்புச் சபைக்கு அமெரிக்க முதல் பெண்மணி தலைமை தாங்கியதன் பொருத்தப்பாடு குறித்தே பல அவதானிகள் கேள்வி எழுப்பியிருக்கிறார்கள்.

பாதுகாப்பு சபையின் தலைமை அதன் பதினைந்து உறுப்பு நாடுகள் மத்தியில் மாதாந்தம் சுழற்சி முறையில் வகிக்கப்பட்டு வருகிறது. பாரம்பரியமாக அந்த நாடுகளின் ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவர்கள் அல்லது சிரேஷ்ட இராஜதந்திர பிரதிநிதிகள் கூட்டத் தொடர்களுக்கு தலைமை வகித்து வருகிறார்கள்.

மோதல்கள் இடம் பெறுகின்ற வலயங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது வாழ்வை வடிவமைப்பதில் தொழில் நுட்பத்தின் பாத்திரம் என்ற விவகாரம் குறித்து மார்ச் 2 ஆம் திகதி பாதுகாப்புச் சபை ஆராய்ந்தது. அந்த கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்கு ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவருக்கு பதிலாக மெலெனியா ட்ரம்ப் அழைக்கப்பட்டிருந்தார்.

ஈரானுக்கு எதிரான குண்டுவீச்சுத் தாக்குதல்களை இஸ்ரேலுடன் சேர்ந்து அமெரிக்க தொடங்கிய (பெப்ரவரி 28) தினத்தில் 160 ஈரானிய பாடசாலை சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அந்த படுகொலைகள் நடந்த மூன்றாம் நாள் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி அதுவும் மோதல்கள் இடம்பெறும் வலயங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு தலைமை தாங்குகிற அளவுக்கு ஐக்கிய நாடுகளின் இன்றையை இலட்சணம் இருக்கிறது.

முக்கியமான பல சர்வதேச ஊடகங்கள் அந்த நிகழ்வை இராஜதந்திர நியமங்களில் இருந்து ஒரு பாரதூரமான விலகல் என்று வர்ணித்தன. ஆனால், அதேவேளை, மெலெனியா பாதுகாப்புச் சபைக்கு தலைமை தாங்கியதை ஆதரித்து கருத்து வெளியிடும் அவதானிகளும் இருக்கிறார்கள். மோதல்கள் இடம்பெறும் வலயங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு என்பது உலகின் கவனத்தை. பெரிதும் ஈர்க்க வேண்டிய ஒரு முக்கிய பிரச்னையாக இருப்பதால் மெலெனியா போன்று மிகவும் பிரபல்யமான ஒருவர் அந்த பாதுகாப்பு சபைக் கூட்டத்துக்கு தலைமை தாங்கியது பொருத்தமானதே என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

காசா பள்ளத்தாக்கில் கடந்த வருட பிற்பகுதி வரை இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலமாக இஸ்ரேலியப் படைகளினால் ஆயிரக்கணக்கில் குழந்தைகளும் சிறுவர்களும் படுகொலை செய்யப்பட்டது குறித்து மெலெனியா வாய் திறக்கவில்லை. அது மாத்திரமல்ல, அந்த சிறுவர்களின் படுகொலைக்கு மெலெனியாவின் கணவர்தான் உடந்தையாக இருந்தார். இத்தகைய ஒரு சூழ்நிலையில் கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்கு மெலெனியாவை அழைத்ததன் மூலம் பாதுகாப்புச்சபை பாரதூரமான மனிதாபிமானப் பிரச்னையை வெறும் பகட்டுக் காட்சிக்கான ஒரு விடயமாக்கியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் எட்டு தசாப்தகால வரலாற்றில் எந்தவொரு அமெரிக்க முதற்பெண்மணியும் பாதுகாப்புச் சபைக்கு தலைமை தாங்க அழைக்கப்பட்டதில்லை. அதுவும் ஐக்கிய நாடுகளை அமெரிக்காவுக்கு ஒரு அநாவசியமான சுமை என்று கூறியவரின் மனைவி அவ்வாறு தலைமை தாங்க அழைக்கப்பட்டது சர்வதேச இராஜதந்திரத்தையே கேலிக்கூத்தாக்கும் ஒரு செயலாகும்.

# இஸ்ரேலுக்கு 20,000 குண்டுகளை விற்க ட்ரம்ப் நிர்வாகம் அனுமதி

வாஷிங்டன், மார்ச். 09

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம், சுமார் 650 மில்லியன் டொலர் மதிப்பிலான 20,000இற்கும் மேற்பட்ட குண்டுகளை இஸ்ரேலுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதியளித்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க காங்கிரஸை தவிர்த்து ட்ரம்ப் நிர்வாகம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று ஊடக அறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இதற்கமைய, இஸ்ரேலுக்கு உடனடியாக குண்டுகளை விற்பனை செய்ய வேண்டிய அவசர நிலை உள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மார்கோ ரூபியோ தீர்மானித்துள்ளதாகவும், இதற்காக ஆயுத விற்பனை மீதான காங்கிரஸ் மதிப்பாய்வுத் தேவைகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த விற்பனையானது அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைக்கும் தேசிய பாதுகாப்புக்கும் பங்களிக்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளதுடன், இதன் பிரதான ஒப்பந்ததாரராக டெக்சாஸில் அமைந்துள்ள "ரெப்கான்" நிறுவனம் செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, நேரடி வர்த்தகப் பரிவர்த்தனைகள் மூலம் மேலும் 298 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான போர் ஆயுதங்களை இஸ்ரேல் கொள்வனவு செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# அமெரிக்க தூதரகம் அருகே பாரிய வெடிப்பு சம்பவம்

ஒஸ்லோ, மார்ச். 09

நோர்வேயின் ஒஸ்லோ நகரில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்துக்கு அருகில் பாரிய வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வெடிப்பு சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது. இதற்கான காரணம் அல்லது இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார் என்பது குறித்து இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

தூதரக நுழைவாயிலுக்கு அருகிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த வெடிப்பினால் எவருக்கும் காயங்களோ அல்லது உயிரிழப்புகளோ ஏற்படவில்லை. சம்பவம் குறித்து அந்த நாட்டு பாதுகாப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(எ)

# அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விசேட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச். 09

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டங்கள் தொடர்பான விசேட கருத்தரங்கு யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அனிருந்தனன் தலைமையில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங் அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.சிவகரனும் கலந்து கொண்டனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நிர்வாகம் மற்றும் அறநெறி உதவிப் பணிப்பாளர் திருமதி அனந்தா அம்பிகைபாகன் சிறப்புரை ஆற்றினார்.

வளவாளர்களாக அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. ஜெயராஜி மற்றும் சைவப்புலவர் யோ. கஜேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில், அனைத்து யாழ். மாவட்ட அறநெறிப்பாடசலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (எ)



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 09 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 25
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சஷ்டி




**மேடம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். தாய் வழியில் ஆதரவுப் பெருகும்.

**இடபம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத்தொல்லை அதிகரிக்கும். நட்பு வட்டம் விரியும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**கடகம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புதுவேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். தைரியம் கூடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். நீங்கள் எதை பேசினா லும் அதை எல்லோரும் தவறாக புரிந்து கொள்வார்கள். தலைச்சுற்றல் முழங்கால் வலி வந்து விலகும்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்சினைகள் அதிகமாகும். தலைச்சுற்றல் முழங்கால் வலி வந்து விலகும்.

**மகரம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.

# யாழில் எரிபொருள் விநியோகம் வழமைக்கு

யாழ்ப்பாணம், மார்ச். 09
காங்கேசன்துறையில் அமைந்துள்ள எரிபொருள் களஞ்சியம் வழமையாக ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்கப்படுவதில்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் டி.எஸ். ராஜகருணாவுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தை திறக்குமாறு கோரிக்கை ஒன்றை முன் வைத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பெற்றோலிய கூட்டுத்தாபனத் தலைவர், குறித்த களஞ்சியத்துக்கான பெற்றோல் விநியோகத்தை மேற்கொள்வதாகவும், இன்று திங்கட்கிழமை முதல் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான பெற்றோல் விநியோகம் வழமை போன்று இடம் பெறுமெனவும் கூறினார். தொடர்ந்து டீசல், மண்ணெண்ணெய் விநியோகமும் வழமை போன்று மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். இதனை வட பிராந்திய முகாமையாளர் எஸ். சிவகரனும் உறுதிப்படுத்தியிருந்தார். (எ)

# தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல், ஊக்குவித்தல் குறித்து விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச். 09
**SLCBC 2nd Consecutive Regional Excellence Award** நிகழ்வுக்கான நுண், சிறிய, நடுத்தர மற்றும் பாரிய தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல் மற்றும் ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இதன்போது கருத்து தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், இந்தக் கலந்துரையாடலானது மாவட்டத்தின் கைத்தொழில் துறைக்கு ஓர் அங்கீகாரத்தை வழங்கும் ஒரு செயல்பாடாக அமைந்துள்ளது.

இத்தகைய விருது வழங்கும் செயல்பாடானது விருது பெறுவதற்காக மட்டுமல்லாமல் அவர்களுடைய உற்பத்தியினுடைய தரத்தை மேம்படுத்துவதற்கான ஊக்கப்படுத்தல் செயல்பாடாக காணப்படுகிறது.

ஒவ்வொரு உற்பத்தியாளரும் தமது உற்பத்தியின் தரத்தை உயர்ந்த நிலையை அடைய வேண்டிய தேவைப்பாடு உள்ளது- என்றார். (எ)

# "இறுதிவரை போராடுவோம்"

யாழ்ப்பாணம், மார்ச். 09
வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அநீதியான செயல்பாடுகளுக்கு எதிராக வரும் வாரத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம் நீதிமன்றை நாடவுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கம் என்ற வகையில் ஆசிரியர்களின் உரிமைகளை நிலைநாட்ட இறுதிவரை போராடுவோம் என்று அந்தச் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சேவையின் தேவை இடமாற்றம் என்ற பெயரில் தொழிற்சங்கங்களின் பங்களிப்பின்றி வடமாகாண கல்வித் திணைக்களத்தால், முன்னெடுக்கப்படும் சட்டவிரோத இடமாற்ற செயல்பாடுகளுக்கு துணை போகும் வகையில் வடமாகாண ஆளுநர் செயல்படுகிறார்.

இலங்கை ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆணைக்குழுவுக்கும் சட்ட ஏற்பாடுகள் குறித்து முறையிட்டிருந்தும், சட்ட முரண் குறித்த விடயங்களுக்கு பதிலளிக்காமல் மழுப்பலான செயல்பாட்டை முன்னெடுத்துள்ளது என்பது வடமாகாண ஆணைக்குழுவும் சுயாதீனமாக இயங்கவில்லை என்பதையே வெளிப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார். (எ)

# பொன் அணிகளின் போர்

யாழ்ப்பாணம், மார்ச். 09
பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி 109 ஆவது ஆண்டாக இம்முறை நடைபெறவுள்ளது.

இது குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. ஊடக சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

பலவிதமான இடையூறுகளுக்கு மத்தியில் நாங்கள் இந்த போட்டியை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றோம்.

இந்த இரண்டு பாடசாலைகளும் நட்பினாலே பிணைந்திருக்கின்றன.

இந்த போட்டி வியாழன், வெள்ளி மற்றும் சனி (12,13,14) ஆகிய மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

பின்னர் 50 ஓவர் போட்டி ஒன்றும், பின்னர் ரி-20 போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளன.

இந்த போட்டியை கண்டுகளிப்பதற்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற இரண்டு பாடசாலைகளின் உறவுகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே, அனைவரும் இந்த போட்டியில் கலந்து சிறப்பிக்க வேண்டும் என தெரிவித்தனர். (எ-05)

# யாழில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ விபத்து!




யாழ்ப்பாணம், மார்ச். 09
உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில், எரிபொருள் நிரப்பு இயந்திரம் ஒன்று முற்றாக சேதமடைந்தது.

எரிபொருள் தாங்கி ஊர்தியிலிருந்து, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் நிலக்கீழ் சேமிப்பு தொட்டிக்குள் எரிபொருளை நிரப்பிக் கொண்டிருந்த போதே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை பயனாளிகளாக கருதாமல் நாட்டின் பங்காளிகளாக கருத வேண்டும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 09

குடும்பத்திலும் சமூகத்திலும் பெண்கள் ஆற்றும் பணி, இன்று ஒரு நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தீர்க்கமான காரணியாக மாறியுள்ளது. எமது அரசாங்கத்தின் "வளமான நாடு - அழகான வாழ்க்கை" கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக, பெண்களை வெறும் பயனாளிகளாக மாத்திரம் கருதாமல், நாட்டின் அபிவிருத்தியின் செயல்திறன்மிக்க பங்காளிகளாக கருதி, அவர்களுக்குரிய கௌரவத்தையும் வாய்ப்புகளையும் வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் ஹரிணி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைச் சமூகத்தினதும் பொருளாதாரத்தினதும் உண்மையான உயிர்நாடியாக எமது பெண்களே விளங்குகின்றனர். குடும்பத்திலும் சமூகத்திலும் அவர்கள் ஆற்றும் பணி, இன்று ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தீர்க்கமான காரணியாக மாறியுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# சட்டவிரோத மீன்பிடியை தடுக்க கடற்படை விசேட நடவடிக்கை

## 19 பேர் கைதாகினர்

கொழும்பு, மார்ச். 09

சட்டவிரோத மீன்பிடி செயல்பாடுகளை தடுப்பதற்காக உள்ளூர் கடல் பகுதிகளில் கடற்படையினர் எடுத்த நடவடிக்கைகளில் 19 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் உரிமம் இல்லாமல் சுழியோடி மற்றும் சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என தெரியவருகிறது.

இதன்போது, தடைசெய்யப் பட்ட மீன்பிடி வலைகள், வெடி பொருட்கள், 2 டிங்கி படகுகள், 3 படகுகள் மற்றும் 7 பாரம்ப ரிய படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கிழக்கு மற்றும் வட மத்திய கடற்படை கட்டளைகளால் திருகோணமலை கதிரவெளி, மூதூர், நோர்வே தீவு, மன்னார் தால்பாடு மற்றும் இரணைதீவு ஆகிய கடல் பகுதிகளில் கடற்படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே குறித்த 19 பேரும் பிடிபட்டனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் பொலிஸாரால் கைது

குருநாகல், மார்ச். 09

குருநாகல் - தித்தவெல்ல, அலஸ்வத்த பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு குருநாகல் பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 126 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹோமாகம பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, சனிக்கிழமை பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 14 கிராம் 420 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் மூலம் ஈட்டப்பட் டதாக சந்தேகிக்கப்படும் 3 இலட்சத்து 25, 000 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட் டன. (எ)

# பெண்களுக்கு உரிய மரியாதையை வழங்குவதே உண்மையான கௌரவம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 09

பெண்களுக்கு உரிய மரியாதையை வழங்குவதே இந்த மகளிர் தினத்தில் அவர்களுக்குச் செய்யக்கூடிய உண்மையான கௌரவமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள விசேட செய்தியில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினம் உலகளாவிய ரீதியில் 104ஆவது முறையாக கொண்டாடப்படும் நிலையில், இம்முறை "அனைத்து பெண்களுக்கும் உரிமைகள், நீதி மற்றும் செயல்பாடுகள்" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு அவர் தனது செய்தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 52 சதவீதமாக இருக்கும் பெண்கள், குடும்பப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும் இல்லத்தரசியாகவும் பெரும் பங்கினை ஆற்றுகின்றனர். எனினும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் கருத்தில் கொள்ளும்போது, நீதி மற்றும் சமத்துவம் ஆகிய துறைகளில் அவர்களுக்கு உரிய நியாயம் கிடைக்கிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

# சகோதரியை காப்பாற்ற சென்ற முதியவர் அடித்துப் படுகொலை!

பொலநறுவை, மார்ச். 09

மின்னேரியா - ரொட்டவெவ பகுதியில், தனது சகோதரியைக் காப்பாற்றச் சென்ற முதியவர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

உயிரிழந்தவர் ரொட்டவெவ, கல்ஓய பகுதியைச் சேர்ந்த 70 வயது முதியவர் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த முதியவரின் சகோதரியை, அவரது மனநலம் பாதிக்கப்பட்ட மகன் தாக்கி வந்துள்ளார். இது குறித்து அறிந்த முதியவர், தனது சகோதரியைக் காப்பாற்றுவதற்காக அவரது வீட்டுக்குச் சென்றார். இதன்போது, கோபமடைந்த சகோதரியின் மகன், தடியால் சரமாரியாகத் தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலில் முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தாக்குதலுக்கு உள்ளான சந்தேகநபரின் தாய் படுகாயமடைந்த நிலையில் ஹிங்குராக்கொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ)

# பாரிய போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு!

கொழும்பு, மார்ச். 09

கடற்படையினர் நாட்டின் தெற்கு திசையிலுள்ள ஆழ்கடலில் முன்னெடுத்த விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் பொதிகளை ஏற்றிச் சென்ற பலநாள் மீன்பிடி படகு ஒன்றை கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, குறித்த மீன்பிடி படகில் இருந்த 6 நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட பலநாள் மீன்பிடி படகு, போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் பொதிகள் மற்றும் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகவும் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் கரைக்கு கொண்டு வரப்படுவதாக கடற்படையினர் தெரிவித்தனர். (எ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வு என்பது தற்காலிக நிவாரணம்

## திகாம்பரம் எம். பி. தெரிவிப்பு

நுவரெலியா, மார்ச். 09

சம்பள உயர்வு என்பது தற்காலிக நிவாரணம். சிறுதோட்ட உடமையாளராக்குவதே நிரந்தரத் தீர்வு என்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் கொட்டகலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மலையக வாழ்வுரிமை மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மலையக மக்களுக்கு உணர்வு பூர்வமாக அபிவிருத்தி வேலைத் திட்டங்களை தமிழ் முற்போக்கு கூட்டணியே முன்னெடுத்துள்ளது. கிடைத்த நான்கே ஆண்டு அரசாங்கத்தில் உட்கட்டமைப்பு, உரிமை சார் திட்டங்களை செய்துள்ளோம். ஆனால், எங்களை விமர்சித்தார்கள். நான் வீடு கட்டும்போது அது குருவி கூடு என்றார்கள். காணிப் பத்திரத்தை நான் வழங்கிய போது அது சட்ட ரீதியானது இல்லை என்றார்கள். எதிர்க் கட்சியிலிருந்து இந்த அரசாங்கமும் விமர்சித்தது. ஆனால், இன்று ஆட்சிக்கு வந்து என்ன செய்துள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (எ)

# "வடக்கு தமிழ் மக்கள் மீது அநுரவுக்கு அதீத அன்பு"

நுவரெலியா, மார்ச். 09

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, தமிழ் மக்கள் மீது அதீத அன்பு கொண்டவராக இருந்தாலும் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை பார்வையிடுவதற்கான வருகை குறைவாகவே காணப்படுகிறது. யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளுக்கு அவருடைய கள விஜயம் அதிகமாக காணப்படுகிறது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொட்டகலை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மலையக வாழ்வுரிமை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# மனித கடத்தலை தடுக்க விழிப்புணர்வு நடவடிக்கை

திருகோணமலை, மார்ச். 09

மனிதக் கடத்தல் குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கில் திருகோணமலை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட குழுக்கள் அமைப்பும் பயிற்சி செயலமர்வு வெற்றிகரமாக நிறைவுற்றது.

பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்ற இப்பயிற்சி செயலமர்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி.எம். ஹேமந்த குமார, மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாக ரன், மாவட்டத்தில் பணிபுரி யும் அரச அதிகாரிகள், சம்பந்தப்பட்ட துறைகளின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச செயலகங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# "பெண்கள் நினைத்தால் சமூகத்தில் மாற்றத்தை கொண்டுவர முடியும்"

நுவரெலியா, மார்ச். 09

இந்த நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிக்கு முன்பும் பின்பும் பெண்கள் இருக்கிறார்கள். பன்முக திறமைகள் கொண்ட பெண்கள் இந்த சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகம். பெண்களுக்கான சம உரிமை மற்றும் பொருளாதார சுதந்திரமே ஒரு சமூகத்தின் வெற்றியாக பார்க்கப்படுகிறது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார். அனைத்து துறைகளிலும் வெற்றி நடைபோடும் அனைத்து மகளிருக்கும் தன்னுடைய இனிய மகளிர் தின வாழ்த்துக்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண்கள் நினைத்தால் இந்த சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டுவர முடியும்.

பெண் இந்த தேசத்தைக் கட்டியமைக்கும் வலிமை கொண்டவள். ஒரு குடும்பத்தை முன்னேற்றவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் பெண்களின் பங்கு என்பது அளப்பறியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# நீரில் மூழ்கிய யுவதி மீட்பு

கொழும்பு, மார்ச். 09

கித்துல்கலை - லியன்ஒயா பகுதியில் நீரில் அடித்துச்செல்லப்பட்ட இளம் பெண் ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இந்த சம்பவம் பதிவானது என்று பொலிஸார் கூறினர்.சம்பவம் நேர்ந்தபோது பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவை சேர்ந்த அதிகாரிகளால் குறித்த பெண் மீட்கப்பட்டு அடிப்படை முதலுதவி வழங்கப்பட்டது.

## வறட்சியான வானிலை

கொழும்பு, மார்ச். 09

தென் மாகாணத்தின் சில இடங்களிலும் அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தின் சில இடங்களிலும் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவை தவிர நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் வறட்சியான வானிலை நிலவக்கூடும்.

மத்திய , சப்ரகமுவ, வடக்கு, வடமத்திய, வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும். நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் சீரான வானிலை காணப்படும்.

# நாடு தழுவிய சுற்றிவளைப்பில் பொலிஸாரால் 981 பேர் கைது!

கொழும்பு, மார்ச். 09


ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 981 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 09 பேர் கைது செய்யப்பட்டதுடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 11 பேர் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 989 சோதனைகள் நடத்தப்பட்டன. 13 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து, 403 கிராம் ஹெரோயின், 922 கிராம் ஐஸ், ஒரு கிலோ 03 கிராம் கஞ்சா, 1189 கஞ்சா செடிகள், 435 கிராம் குஷ் ரக போதைப்பொருள், 15 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 1086 போதை மாத்திரைகள், 02 கிலோ 155 கிராம் மதனமோதகம் மற்றும் 02 கிலோ 377 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# மஹரகம நகரில் உள்ள கடைகளில் தீப்பரவல்



கொழும்பு, மார்ச். 09

மஹரகம நகரில் அமைந்துள்ள கடைத்தொகுதியொன்றில் நேற்றுக்காலை தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கோட்டே தீயணைப்புப் பிரிவின் 04 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (எ)

# ஆயுதங்களற்ற கப்பல் என்ற தகவலை மறுத்தது அமெரிக்கா

கொழும்பு, மார்ச். 09

இலங்கை கடற்பரப்புக்கு அண்மையில் அமெரிக்கத் தாக்குதலுக்கு உள்ளான ஈரானின் போர்க்கப்பல், ஆயுதங்களற்ற நிலையில் இருந்ததாக வெளியாகும் தகவல்களை அமெரிக்க இந்தோ-பசுபிக் கட்டளைப்பீடம் மறுத்துள்ளது.

குறித்த கப்பல், ஆயுத மோதல் சட்டத்தின் கீழ் ஒரு செல்லுபடியாகும் இராணுவ இலக்காகும். எனவே, அந்தப் போர்க்கப்பலை அழிப்பதற்குப் பலத்தைப் பிரயோகிக்க அனுமதி உண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அந்த கப்பல் அழிக்கப்பட்டதாகவும், ஆயுத மோதல் சட்டங்களுக்கு இணங்க, இந்தச் சம்பவத்தில் உயிர் தப்பியவர்களுக்கு இலங்கை தரப்பினால் உயிராபத்து ஏற்படாத வகையில் மனிதாபிமான உதவி மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில்...

இலங்கை என்ற நாமத்தை உலகிற்கு கொண்டு செல்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து மக்களையும் பேதமின்றி, பரிவுணர்வுடன் நடத்தும் ஒரு அரசாக மாற்றுவதில் இந்நாட்டு சிறுவர்களும் பெண்களும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளதாகவும், தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது தொடர்பில் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

இன்று போதைப்பொருள் இளைஞர்களை விழுங்கி வருவதாகவும், இது தாய்மார்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, தமது பிள்ளை போதைப்பொருளுக்கு அடிமையாவது ஒரு தாய்க்கு வேதனையைத் தருவதாகவும், உறவினர்கள் மத்தியிலும் கிராமத்திலும் பிள்ளை ஒதுக்கப்படுவதனால் தாய்மார்கள் நிர்க்கதியாகியுள்ளனர் எனவும், அதனால் அரசாங்கம் நச்சுப் போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதாகவும், போதைப்பொருள் அனர்த்தத்தை முழுமையாக முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் கூறினார். (அ)

## இந்து சமுத்திரத்தில்...

அமைதியான நாடாகவே இருந்து வருகிறது, அந்த நிலைப்பாடு தொடரும். மத்திய கிழக்கு போர் சூழலில் நாம் யாருக்கும் சார்பானவர்கள் அல்லர்.

அந்த வகையில் இப்பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையையும் அமைதியையும் தான் நாம் வலியுறுத்துகின்றோம். இந்து சமுத்திரத்தில் கப்பல்கள் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும் என்பதே எமது விருப்பம். பல ஆண்டுகளாக கப்பல் போக்குவரத்தின் பாதுகாப்பைப் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். எனவே, அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் இதைத் தீர்க்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நாம் நிதானமாகவும், மனித உயிர்கள் குறித்து எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்து சமுத்திரத்தில் மோதலை நாம் விரும்பவில்லை. உலகின் பரபரப்பான கப்பல் போக்குவரத்து பாதையிலிருந்து இலங்கை சில கிலோமீற்றர் தொலைவில் தான் உள்ளது. ஆண்டுக்கு சுமார் 60,000 கப்பல்கள் இலங்கையைக் கடந்து செல்கின்றன. பெருமளவிலான எரிபொருள் இதன் வழியாகவே கொண்டு செல்லப்படுகிறது. எனவே, இந்து சமுத்திரத்தில் போர்ச்சூழல் ஏற்படும் பட்சத்தில் அது இலங்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்துக்கும் கடுமையான எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

அந்த வகையில் ஈரான் கப்பல் மீதான தாக்குதல் குறித்து நாம் கவலையடைகின்றோம். இவ்வாறான மோதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இவை இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்-என்றார். (அ)

## சர்வதேச...

சர்வதேச நீதி விசாரணையே வேண்டும் எனக் கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் இறுதி யுத்தத்தின் சாட்சியாக காணப்படும் வட்டுவாகல் பாலத்தில் நேற்று மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது .

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஒன்பது ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் சர்வதேச மகளிர் தினமான நேற்று மகளிர் தினம் எமக்கு துக்க தினம் என தெரிவித்து, தமக்கு சர்வதேச விசாரணையே தீர்வு என குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என இதுவரை இலங்கை அரசாங்கம் எந்த தகவலும் வெளியிடவில்லை எனவும் இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து, இராணுவத்தினரிடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே, வட்டுக்கோட்டை தீர்மானம் வழிகாட்டி சுய நிர்ணயம் எங்கள் உரிமை, சர்வதேசமே பதில் சொல் என பல்வேறு கோசங்களை தாங்கிய பதாதைகளுடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் வாசிக்கப்பட்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரணிலை...

குறிப்பிட்டுள்ளதாவது-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட காரணமாக அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உண்மையில் ஒரு குற்றமென்றால், இலங்கையில் இருந்த ஒவ்வொரு முன்னாள் ஜனாதிபதிகளும் கைது செய்யப்படவேண்டும் என்பதே யதார்த்தமாகும்.

தகவல் அறியும் உரிமையைப் பயன்படுத்தி ஒஷல ஹேரத் என்பவரால் வுல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்திடம் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2023 இல் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்தது ஒரு உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்ட நாளிலிருந்தே நான் கூறி வருவது இது ஒரு பயனற்ற விவாதம் என்பதாகும். ஒரு ஜனாதிபதியின் பயணங்கள் உத்தியோகபூர்வமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், பாதுகாப்பு மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் வழங்க வேண்டும்.

அது உலக நியதியாகும் .இல்லையெனில், நாட்டுத் தலைவர்கள் பாதுகாவலர்கள் இல்லாமலும், பாதுகாப்பு வாகனங்கள் இல்லாமலும் தனிப்பட்ட பயணங்களில் செல்லும்போது எதிரிகளால் இலக்கு வைக்கப்படுவார்கள்.

இந்தக் கைது நடவடிக்கையின் பின்னணியில் உள்ள ஜனாதிபதி அநுரவுக்கும், எதிர்காலத்தில் இந்தக் கைது நடவடிக்கை தன்னைத்தானே தாக்கும் செயலாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மத்திய கிழக்கு...

இலங்கையில் உற்பத்தியாகும் தேயிலையில் சுமார் 50 வீத மத்திய கிழக்கு நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போதுள்ள போர்ச் சூழலால் இந்த விநியோகச் சங்கிலி முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏற்றுமதி சரிவடைந்துள்ளதால், சிறு தோட்ட உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடந்த மாதத்திற்கான கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் தேயிலை உற்பத்தி நிலையங்களில் இருப்புக்கள் தேக்கமடைந்துள்ளதால், உற்பத்தியைக் குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் இதே நிலையில் தொடருமானால், நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டலில் பிரதான பங்கு வகிக்கும் தேயிலைத் தொழில் பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என இரத்தினபுரி மாவட்ட தேயிலை உற்பத்தி நிலையங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## ஓமான் எயார்...

வானூர்தி சேவைகளையும் இரத்து செய்துள்ளதாக ஓமான் எயார் வானூர்தி சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

டுபாய், பஹ்ரைன், டோஹா, தம்மாம், குவைத், பக்தாத், காசாப் ஆகிய நகரங்களுக்கான வானூர்தி சேவைகளும், டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகருக்கான வானூர்தி சேவைகளும் பாதிக்கப்படும் என அந்த வானூர்தி சேவை நிறுவனம் நேற்று மாலை அறிவித்துள்ளது.

மோதல் சூழ்நிலை மற்றும் வான்பரப்பு கட்டுப்பாடுகள் காரணமாகப் பயணிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு வருந்துவதாகவும் ஓமான் எயார் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (ஒ)

## ஈழத் தமிழர்கள்...

மகளிர் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச மகளிர் தினமானது பெண்களை மதிக்கின்ற ஒரு மகத்தான நாளாகும் பெண்களுக்கு வாக்களிக்கின்ற உரிமை கூட இல்லாத ஒரு காலம் இருந்துள்ளது.

முன்னர் பெண்கள் உத்தியோகம் பார்க்க முடியாது இருந்தது பெண்கள் தங்களுடைய உரிமை பற்றி பேச முடியாமல் இருந்தது. அவற்றை எல்லாம் கடந்து பெண்களுக்கான உரிமைகளை உலகம் வழங்கிய மிக உன்னதமான ஒரு நாளாக இந்த மார்ச் 8 சர்வதேச பெண்கள் நாள் காணப்படுகின்றது.

இன்று இலங்கையில் கூட சாதாரண கூலி வேலைக்கு சென்றால் பெண்களுக்கு ஒரு குறைவான சம்பளம் ஆண்களுக்கு கூடிய ஒரு சம்பளம் என வரையறுக்கப்படுகிறது அரச பணிகளில் அவ்வாறு இல்லையென்றாலும் ஏனைய விடயங்களில் அவை பார்க்கப்படுகின்றன. பெண்கள் தாய் தாரம் பிள்ளை என்று பார்க்கப்படுகிறனர். தற்போது பல நாடுகள் பல்வேறுபட்ட பிரச்னைகளை எதிர்கொள்கின்றன.

ஈரான் - இஸ்ரேல் மீதான தாக்குதல் என்பது உலகத்திலும் என் எங்களுடைய நாட்டின் பொருளாதாரத்திலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

நாங்கள் சிறிய அளவிலே முன்னேறுகின்ற போதெல்லாம் உலகத்தில் ஏற்படுகின்ற பொருளாதார நெருக்கடிகள் எங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தி எங்களையும் பின் தள்ளுகின்றன.

எங்கள் மீது இலங்கை அரசு கொத்துக் குண்டுகளை வீசி யுத்தம் புரிந்து எங்களை அழித்தார்கள். யுத்தம் முடிந்த 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் கொத்துக் குண்டுகளின் சிதைவுகளும் எச்சங்களும் புகைப்படங்களாகவும் வீடியோ ஆவணங்களாகவும் வெளியே கொண்டுவரப்பட்டன.

அதனை பல தடவை பாராளுமன்றத்திலும் நான் பேசியிருக்கின்றேன். சர்வதேச போர் விதிகளை மீறி தமிழர்கள் மீது இலங்கை அரசு மிக மோசமான போரியல் நடவடிக்கைகளை செய்தது என்பதற்கான ஆதாரங்கள் காணப்பட்டன

அதேபோன்று கொத்துக்குண்டுகளை இப்போது ஈரான் இஸ்ரேல் மீது வீசி இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்

சர்வதேச போர் விதிகளை தாண்டியும் போர் முறைகளை தாண்டியும் அப்பாவிகளாக இருந்த தமிழ் மக்கள் மீது 22 நாடுகள் சேர்ந்து இவ்வாறு இதே கொத்துக் குண்டுகளை வீசி போரியல் வல்லமையில் ஒரு சிறிய இனக்குழுமமாக நாங்கள் அழிக்கப்பட்டோம்

நாங்கள் அழிக்கப்படும் போது யாரும் எங்களுக்காக குரல் தரவில்லை. ஐக்கிய நாடுகள் சபையில் 2009ஆம் தமிழ் மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்பதை தீர்மானமாக கொண்டு வந்தபோது ஈரான் நாடு ஒரு போதும் எங்களுக்கு ஆதரவாக இருந்ததில்லை. அதனை எதிர்த்தே வந்துள்ளது-என்றார். (அ)

## இந்தியப் பெருங்கடல்...

வலயமாகப் பலமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், இது எவ்விதப் பகைமை நடவடிக்கைகளும் அற்ற ஒரு பிராந்தியமாகத் தொடரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கு அருகிலுள்ள சர்வதேசக் கடற்பரப்பில் ஈரானியப் போர்க்கப்பலான "ஐரிஸ் டேனா" மூழ்கியமை மற்றும் மற்றுமொரு ஈரானியக் கப்பலான "ஐரிஸ் புச்சர்" திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதிக்கப்பட்டமை ஆகியவற்றைத் தொடர்ந்து பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார். (அ)

## காப்பாற்றப்பட்ட...

கடற்படையின் மீட்புக் குழுவினர் கரைக்கு அழைத்து வந்தனர்.

பின்னர் அவர்கள் சிகிச்சைக்காக காலியில் உள்ள கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மேலும் 10 பேர் இன்னும் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த கப்பல் மீதான தாக்குதலில் உயிரிழந்த 84 ஈரான் மாலுமிகளின் உடல்கள் மீதான மரண பரிசோதனைகள் கடந்த சில நாட்களாக காலி தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை, சிகிச்சை பெற்று வரும் மாலுமிகளில் 8 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற "மிலன் 2026" கூட்டுப் பயிற்சியில் பங்கேற்கச் சென்ற ஈரானின் மூன்று கப்பல்களில் ஒன்றான ஐரிஸ் புச்சர் என்ற போர்க்கப்பல், கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாணந்துறைக்கு அப்பால் உள்ள இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் நுழைந்தது.

அதற்கமைய, கடந்த மார்ச் 5ஆம் திகதி இரவு அந்தப் போர்க்கப்பலின் ஊழியர்கள் உட்பட 204 மாலுமிகளை இலங்கை கடற்படையினர் கொழும்பு துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்.

இவர்களில் 53 அதிகாரிகள், 54 கடற்படை பயிலுநர்கள், 48 சிரேஷ்ட மாலுமிகள் மற்றும் 23 மாலுமிகள் அடங்குகின்றனர். இவர்கள் வெலிசறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ)

## மின்சார சபை...

ஊழியர்களின் பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேதன உயர்வு 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முன்திகதியிடப்பட்டு வழங்கப்படவுள்ளது.

மின்சார சபையானது மின் உற்பத்தி, கடத்துகை, விநியோகம் மற்றும் கட்டமைப்புச் செயல்பாடுகளுக்காகப் புதிதாக நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களாக மாற்றப்பட்டு வருகின்றது.

இந்த மாற்றத்தின் போது ஊழியர்களின் ஒத்துழைப்பை உறுதிப்படுத்தவும், பணியாளர்களின் மன உறுதியைப் பேணவும் இந்த வேதன உயர்வு உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பெண்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 09

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களின் சேவையை பாராட்டி அவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பொது நுலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இதன்போது வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

(அ-05)

## இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் கொலை!

சென்னை, மார்ச் 09

கும்மிடிப்பூண்டி பெத்திக்குப்பம் பகுதியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமின் தலைவர் நேற்று முன் தினம் இரவு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

கும்மிடிப்பூண்டியில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில், 937 குடும்பங்களைச் சேர்ந்த 2,770 பேர் வசித்து வருகின்றனார்.

அந்த முகாமின் தலைவராக இருப்பவர் சிவகுமார் என்கிற கண்ணன் (வயது-42). இவர் நேற்று முன் தினம் இரவு முகாம் பகுதியில் ஒரு பிரச்னைக்காக சமரசம் செய்ய சென்றார். அப்போது மார்மக் கும்பலை சேர்ந்தவர்கள் அவரின் முகத்தில் சரமாரியாக வெட்டினர்.

ஆபத்தான நிலையில் கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சிவக்குமாரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த 300 இற்கும் மேற்பட்டோர் கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டனர்.

இதைத் தொடர்ந்து, மருத்துவமனை வளாகத்தில் பதற்றமான சூழல் நிலவியதால், பொலிஸார் உடனடியாக அம்புலன்ஸை வரவழைத்து, கண்ணனின் சடலத்தை பிரேதப் பரிசோதனைக்காக பொன்னேரி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில், கும்மிடிப்பூண்டி சிப்காட் பொலிஸாரின் விசாரணையில், முகாமைச் சேர்ந்த கும்பல் ஒன்று, முன் விரோதம் காரணமாக சிவக்குமாரை கொலை செய்ததாக கூறப்படுகிறது.

(அ)

## போதை மாத்திரைகளுடன் நான்கு இளைஞர்கள் கைது!

வவுனியா, மார்ச் 09

வவுனியாவில் போதை மாத்திரைகளுடன் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து வவுனியா பூந்தோட்டம் பகுதியில் நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போது 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 500 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. (அ)

### கொழும்பில் தங்க வைக்கப்பட்டுள்ள

# ஈரான் கலங்கள், கடற்படையினரை கையாள்வது இலங்கையின் முடிவு!

### அமெரிக்கா தலையிடாது என்கிறது வெளியுறவுத்துறை

கொழும்பு, மார்ச் 09

"ஈரானிய கடற்கலங்களில் பயணித்து, இலங்கையில் தற்போது தஞ்சமடைந்துள்ள ஈரானியர்களை கையாள்வதற்கு இலங்கைக்கு முழுமையான சுதந்திரம் உண்டு. இது விடயத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு என்ன செய்ய வேண்டும் என்பதை இலங்கையே தீர்மானிக்கட்டும்" என்று அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"ஐரிஸ் டேனா" போர்க் கலத்தில் இருந்து உயிருடன் மீட்கப்பட்ட 32 பேரையும், "ஐரிஸ் புச்சர்" கலத்திலிருந்து கரை சேர்க்கப்பட்டுத் தற்போது கொழும்பில் தங்க வைக்கப்பட்டுள்ள 208 பேரையும் ஈரானுக்கு மீளத் திருப்பி அனுப்பக் கூடாது என்றும், அவர்களை அமெரிக்காவுக்கு எதிரான சர்வதேச பிரசார நடவடிக்கைகளுக்கு ஈரான் பயன்படுத்துவதற்கு இலங்கை அரசு துணைபோகக் கூடாது என்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உள்ளகக் கேபிள் தகவலில் குறிப்பிடப்பட்டிருந்ததாகக் கடந்த வாரம் வெளியான செய்திகள் குறித்து வினவியபோதே அந்த அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் இறையாண்மையை அமெரிக்கா நிச்சயமாக மதிக்கிறது. கப்பல், அதன் பணியாளர்கள் மற்றும் கடலில் மீட்கப்பட்ட ஈரானிய மாலுமிகள் தொடர்பான இறுதி முடிவு இலங்கையிடம் மட்டுமே உள்ளது என்றும், அது நாட்டின் உள்நாட்டு சட்டங்கள் மற்றும் சர்வதேச சட்டக் கடப்பாடுகளுக்கு அமையச் செயற்படும் என்றும் அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

(ஒ)

## ஈரான் கப்பல்களில் மீட்கப்பட்ட மாலுமிகளுக்கு இலவச விஸா!

கொழும்பு, மார்ச் 09

ஈரான் கப்பல்களில் இருந்து மீட்கப்பட்ட குழுவினருக்கு ஒரு மாத காலத்துக்கு இலவச விஸாக்களை வழங்கி, மனிதாபிமான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் கடல்சார் சட்ட விதிகளைப் பின்பற்றி, அணிசேரா கொள்கையின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் எத் தரப்பினருக்கும் ஆதரவளிப்பது எமது நோக்கமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கமானது, நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழுக்கு கடத்தப்பட்ட 20 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட தேக்க மரக்குறிகள்!



யாழ்ப்பாணம், மார்ச் 09

யாழ்ப்பாணத்திற்கு சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான தேக்க மரக் குற்றிகளைக் கடத்தி வந்த சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வன்னி பகுதியில் இருந்து பாரவூர்தி ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மரம் கடத்தி வந்து மீசாலைப் பகுதியில் உள்ள மரக்காலையில் அவற்றை இறங்குவதாக சாவகச்சேரி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றது.

தகவலை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பாரவூர் தியை கைப்பற்றியதுடன், அதனுள் இருந்த 52 தேக்க மரக் குற்றிகளையும் மீட்டனர்.

அதனை அடுத்து பாரவூர்திச் சாரதியை கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதுடன், கைப்பற்றப்பட்ட பாரவூர்தி மற்றும் மரக்குறிகளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

கைப்பற்றப்பட்ட மர குற்றிகளின் பெறுமதி சுமார் 20 இலட்ச ரூபாய் என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# கிளிநொச்சியில் சிறப்பாக நடந்த சமத்துவ கட்சியின் மகளிர் தினம்





கிளிநொச்சி, மார்ச் 08

சமத்துவக் கட்சியின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றன.

2026 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் சமத்துவக் கட்சியின் மகளிர் அணி பொறுப்பாளர் தர்மலிங்கம் செல்வராணி தலைமையில் இடம்பெற்றது.

போருக்கு பின்னராக மறு சீரமைப்பு பெண்களின் உரிமையிலாமல் முழுமையல்ல, பெண் விடுதலை இல்லாத இன விடுதலையும் முழுமையல்ல எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் பெண்களும் சமகால சவால்களும், என்ற

தலைப்பில் ஆசிரியை சசிகலா இளங்கோமன்னனும், பெண்களும் அரசியலும் எனும் தலைப்பில் சமூக செயற்பாட்டாளர் வி.சுதர்சனாவும் சிறப்புரையாற்றினார்கள். அத் தோடு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சந்திரவதனி, முன்னாள் போராளி வி.வாணி, சமத்துவக் கட்சியின் தலைவர் சு. மனோகரன், கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரும் உரையாற்றினார்கள்.

வரவேற்புரையினை பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் நி. சுவர்ணா, நிகழ்த்தினார். கட்சியின் செயற்பாட்டாளர்கள், அமைப்பாளர்கள் மற்றும் நூற்றுகணக்கான பொது மக்கள் இதில் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.